www.padippakam.com



தொழிலாளர் பாதை 3/-

மாதமிரு இதழ் — 437 ● 1993 ஜூலை 30 வெள்ளிக்கிழமை

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையின்

**25வது ஆண்டு நிறைவு**

அட்டன் நகர சபை மண்டபம்
செப்டம்பர் 12 ஞாயிறு
காலை 9 மணி — மாலை 5 மணி வரை

அமைப்பு:– 'தொழிலாளர் பாதை'
வெளியீட்டாளர்கள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் –
இளம் சோசலிஸ்டுகள்

# சாவாதிகார தேசிய அரசாங்கத்துக்கு தயாரிப்பு

ஜனாதிபதி விஜேதுங்கவின் யூஎன்பி அரசாங்கத்துடன் சகல பிற்போக்குச் சக்திகளையும் சேர்த்து, தேசிய அரசாங்கம் என்ற ஒன்றினை அமைக்கும் முயற்சியில் முதலாளி வர்க்கத்தின் நனவான பகுதியினர் இறங்கியுள்ளனர். 'தேசிய பேரழிவில்' இருந்தும் 'தேசிய பிரச்சினைகளில் இருந்தும் நாட்டினை விடுவிக்கும் பேரில் தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் இராணுவ சர்வாதிகாரத்தினை நிறுவுவதே இதன் இலக்காகும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கின்றது.

யூஎன்பி யினதும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினதும் தலைவர்கள் 'தேசிய அரசாங்கம்' அமைப்பது தொடர்பாக நடாத்திய இரகசியப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இப்போது உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன. தமது கட்சி யூஎன்பி யுடன் 'இணைந்து' கொள்ளப் போவதில்லை. ஆனால் 'தேசியப் பிரச்சினைகளை தீர்ப்பதில் யூஎன்பி அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க உண்மையில் தீர்மானித்துள்ளதாக, ஜ ஐ.தே.மு. யின் செயலாளர் ஜீ.எம். பிரேமச் சந்திர ஜூலை நடுப்பகுதியில் அறிவித்தார். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஏஜண்டாக பிரசித்தி பெற்ற ஜ.ஐ.தே.மு. தலைவர் காமினி திசாநாயக்க இந்த பிற்போக்கு அணி திரள்வுக்காக துடிப்பவர்களில் முன்னணியில் நின்று வருகின்றார்.

ஜனாதிபதி பிரேமதாசவுடனான இழுபறிகளால் நாட்டில் இருந்து வெளியேறி மேற்கத்தைய நாடுகளில் சஞ்சரித்து வந்த ஜயவர்த்தன அரசாங்கத்தின் நிதி அமைச்சர் ரொனி டீ மெல், இப்பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் நாடு திரும்பியுள்ளார், டீ.பி, விஜேதுங்கவின் ஆட்சியின் கீழ் 'புதிய யுகம் உதயமாகியுள்ளது' என்ற பந்தத்துடன் யூஎன்பி அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக டீ மெல் உறுதியளித்துள்ளார்.

இதற்கிடையே மற்றைய முக்கிய முதலாளித்துவக் கட்சியான சி.ல.சு.க.யின் பிரதம அமைப்பாளரான அனுர பண்டாரநாயக்க பிற்போக்கு கூட்டுக்கு வக்காலத்து வாங்கிய வண்ணம், தமது கட்சியில் இருந்து பிரியம் கட்டத்துக்கு வந்துள்ளார். தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக அனுர பண்டாரநாயக்க மாஜி ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக முதலாளித்துவ ஊதுகுழலான 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை அம்பலபடுத்தியது. அனுர பண்டாரநாயக்க, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன்—சிறப்பாக குடியரசுக் கட்சிக் காரர்களுடன் நெருக்கமான உறவுகள் வைத்துக் கொண்டுள்ளவராகப் புகழ் பெற்றவர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதற்கு தடையாக உள்ள அரசியலமைப்பு தகுதிகளை நீக்கும் முயற்சியில் சி.ல.சு.க. எம்.பி. யும் புகழ் பெற்ற இனவாதியுமான டாக்டர். நெவில் பெர்னாந்து ஈடுபட்டுள்ளார், இந்த விதத்தில் இவர் சமர்ப்பித்துள்ள 17வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் யூஎன்பி அரசாங்கத்துடன் சேர்ந்து கொள்ள அனுர பண்டாரநாயக்க தலைமையிலான சி.ல.சு,க. கும்பல் நடாத்திவரும் இயக்கத்தின் ஒரு பாகமாகும்.

பிற்போக்கு இனவாதக் கட்சியான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசின் முதலாளிகள் இந்த தேசிய அரசாங்கத்தில் நுழைந்து கொள்ள ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளனர், அத்தோடு சிங்கள இனவாத மக்கள் ஐக்கிய முன்னணி (எம்.ஈ.பி.) தலைவர்களையும் அனுர பண்டாரநாயக்க ஊடாக இந்த 'தேசிய அரசாங்கத்தில்' சேர்த்துக் கொள்வது சாத்தியமாகுமா என முதலாளித்துவப் பத்திரிகைகள் கணக்குப் பார்த்துக் கொண்டுள்ளன,

கடந்த ஆண்டில் நானாவித ஏகாதிபத்திய முகாம்களின் பின்னால் அணிதிரண்டு கொண்டு தமது சலுகைகளை காக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள முதலாளித்துவக் குழுக்களும் கும்பல்களும் யூஎன்பியினுள் தமது அரசியல் ஆளுமையை காத்துக் கொள்ளும் நாய்ச் சண்டையில் ஈடுபட்டன. 1991 ஆகஸ்டில் திசாநாயக்க—அத்துலத்முதலி கும்பல் பிரேமதாச அரசாங்கத்தில இருந்து பிரிந்து, அரசியற் குற்றச்சாட்டுப் பத்திரத்தினை முன்வைத்தனர். இது புஸ்வாணம் ஆகியதும் மாஜி பிரதி பொலிஸ்மா அதிபரான பிரேமதாச உடுகம்பொலவின் 'கறுப்பு பூனை அம்பலப்படுத்தல்கள், முன்வைக்கப்பட்டன. இதுவும் அந்த நாய்ச் சண்டையின் ஒரு பாகமே. இவை அத்துலத் முதலியினதும் ஜனாதிபதி பிரேமதாசவினதும் படுகொலைகள் மூலம் உச்சக்கட்டத்தை எட்டின, இப்போது பிரேமதாசவுடன் கசப்படைந்த பகுதியினர் தேசிய அரசாங்கம் என்ற பேரில் ஒன்றுசேர முயற்சிக்கின்றனர்.

இவை இலங்கை முதலாளி வர்க்கத்தின் படுபிற்போக்குக் குழுவினரின் துருவப்படுத்தலையும், மாற்று முதலாளித்துவ ஆயுதமாக இலங்கை முதலாளி வர்க்கத்தினால் கட்டியெழுப்பப்பட்டி சி.ல.சு.க, சிதறுண்டு போனதையும், அதன் கோஷ்டிகள் தேசிய அரசாங்கத் தயாரிப்புக்களில் குதித்துள்ளதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இந்தத் தேசிய அரசாங்கத் தயாரிப்புக்கள் ஒரு 'தேசிய' முயற்சி அல்ல. இதனை ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும், ச.நா.நி. உலக வங்கி, பன்னாட்டுக் கம்பனிகளுள் கூட்டாகத் தயார் செய்கின்றனர். காட்டுமிராண்டி சுரண்டலுக்குப் முதலீடுகளுக்கும் இவர்கள் அரசியல் ஸ்திரப்பாட்டினை உறுதி செய்யும் 'பலம் வாய்ந்த அரசாங்கம்' ஒன்றினை வேண்டி நிற்கின்றனர்.

'இலங்கைக்கு உதவி வழங்கும் குழு' 82 கோடி டாலர் கடன் வழங்க முன்வந்ததற்குக் காரணம் மின்சாரக் கட்டணத்தினை அதிகரித்தல், பாண், மாவு, விலைகளை உயர்த்துதல், மாவு அரிசி இறக்குமதியைத் தனியாரிடம கையளித்தல் போன்ற நடவடிக்கைகளை விஜேதுங்க அரசாங்கம் எடுத்ததனால் மட்டுமல்ல. மின்சார சபை தொடக்கம் பல்கலைக் கழகங்கள் வரை அனைத்தையும் தனியார் மயமாக்க யூஎன்பி அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளதே காரணம். தோட்டத்துறையுள் மட்டும் ஐந்து இலட்சம் தொழிலாளர்களை நடுறோட்டிற்குத் தள்ளும் வேலையை விஜேதுங்க அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

அனைத்துலக ரீதியில் வர்த்தக யுத்தம் உச்சமடைந்துள்ளது. சமீபத்தில் டோக்கியோவில் நடைபெற்ற ஜீ 7 மகாநாடு தோல்வியில் முடிவடைந்தது. எந்தவொரு அடிப்படை முரண்பாடு தொடர்பாகவும் ஏகாதிபத்திய வல்லரசுகளால் உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை. இந்த மகாநாட்டுககு முன்னோடியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈராக்கின் மீது நடாத்திய ஏவுகணைத் தாக்குதல் வெறுமனே ஒரு பின் தங்கிய நாட்டிற்கு எதிரான தாக்குதல் அன்று. அமெரிக்காவின் முழு வர்த்தகப் போட்டியாளர்களுக்கும் எதிரான ஒரு இராணுவ எச்சரிக்கையாகும்.

அத்தோடு இந்தத் தேசிய அரசாங்கம் வடக்கு–கிழக்கு இனவாத யுத்தத்தினை முன்னெடுப்பதன அடிப்படையில் இடம்பெற வேண்டும் என்பதிலும் முதலாளி வர்க்கம் உறுதியாக உள்ளது, ''விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராட ஒரு தேசிய அரசாங்கம்:... இக்கட்சிகள் விடுதலைப் புலிகளின் மிரட்டல்களுடன் போரிட்டுத் தோல்வி அடையச் செய்ய இணைவார்களானால் அதன் மூலம் தேசியப் பணிக்கு மாபெரும் சேவை செய்யப்படுவதோடு அது நிஜமாகவே ஒரு தேசிய அரசாங்கமாகவும் விளங்கும்.'' (சன்டே டைம்ஸ் 1992 ஜூலை) காமினிதிசாநாயக்கவும் அனுர பண்டாரநாயக்கவும் இந்தக் காட்டுமிராண்டி யுத்தத்தின் பேரில் ஒன்றிணைய வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

சி.ல.சு.க. தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவும் அவருடன் அணிதிரண்டுள்ள துரோக சமசமாஜ ஸ்டாலினிச, நவசமசமாஜ தலைவர்களும் இந்த ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியை வேறு வழியில் தாங்கிப் பிடிக்க முயல்கின்றனர், எனவேதான் அவர்கள் இந்த தேசிய அரசாங்கத்தில் நுழைந்து கொள்ள முயற்சிக்கவில்லை. 'தேசிய அரசாங்கம்' என்ற பேரிலோ அல்லது வேறு எந்த நாமத்திலோ திணிக்கபபடும் மரண அடியையிட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை எச்சரிக்கின்றது.

இந்த மிரட்டல்களுக்கு முகம் கொடுக்கவும் எதிர்த்தும் போராடவும் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்குப் புதிய வேலைத்திட்டமும் புதிய புரட்சிகரத் தலைமையும் அவசியம். வட—கிழ் மாகாணத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் விடுதலைப் புலிகள் தலைமையை விஜேதுங்க அரசாங்கத்துடனும், ஏகாதிபத்தியவாதிகளுடனும் கொண்டுள்ள அளவிற்கு பிற்போக்கு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எதிராக சுயாதீன தொழிலாளி வர்க்க வேலைத்திட்டத்துக்கும் போராட வேண்டும.

உலக முதலாளித்துவத்தைத் தூக்கி வீசும் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இலங்கையின் யூஎன்பி அரசாங்கத்தினைத் தூக்கி வீசி ஏகாதிபத்தியவாதிகளதும் சொத்துக்களையும் அடிப்படை முதலாளித்துவத் தைத்தொழில்களையும் தொ

(18 ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com




# தொழிலாளர் பாதை

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம்
கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 61 ★ ஆகஸ்டு, 1993 விலை 2-00 ★


### ஆகஸ்ட் மாத நிதி ரூ. 2,500

உறுப்பினர்களே, வாசகர்களே, ஆதரவாளர்களே,

ஆகஸ்டு மாதத்திற்கான நிதி இலக்கு ரூ. 2,500 அதில் 13-8-93க்குள் ரூ, 818 திரட்டப்பட்டிருக்கின்றது. இந்த நிதி இலக்கை பூர்த்தி செய்வதற்கான போராட்டத்தை அனைத்து கிளைகளிலும் எடுக்க வேண்டும். தொழிலாள வர்க்கத்தின் தலைமை நெருக்கடியை தீர்க்கும் போராட்டத்தின் ஒரு பகுதியாக, தொழிலாளர்களின், இளைஞர்களின் முன்னணி பகுதியை மார்க்சிஸ்டுகளாக பயிற்றுவிக்கும் போராட்டத்தில் தொழிலாளர் பாதை தீர்க்கமான பங்கை வகிக்கின்றது இந்த புரட்சிகர பத்திரிகை தொடர்ந்து வெளிவரவும், மேலும் அபிவிருத்தி செய்யவும் உங்களின் முழு ஆதரவும் தேவை. எனவே தாங்களின் பங்கை (நிதியை உடனே அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் சொள்கிறோம்.

நிதி அனுப்ப வேண்டிய முகவரி

தொழிலாளர் பாதை
22, தேவராஜீலு தெரு, அயன்புரம், சென்னை—23

# மேற்கு வங்க போலீஸ் துப்பாக்கிச் சூடு!

# ஜோதிபாசு அரசாங்கத்தின் கொலை வெறித் தாக்குதல்!


## 12க்கு மேற்பட்டோர் பலி.

ஜூலை 21ல் கல்கத்தாவில் ஸ்டாலினிச ஜோதி பாசு அரசாங்கத்தின் போலீசாரால் 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஸ்டாலினிச அரசாங்கத்தின் இந்த படுகொலை நடவடிக்கையை காங்கிரஸ் கட்சியின் 'ஜனநாயக! விரோத செயல்களுக்கு எதிராக எடுக்கப்பட்டதாக ஜோதிபாசு நியாயப்படுத்தினர். ''ஜனநாயகம்'', 'சட்டம்'' ''ஒழுங்கு'' ஆகியவற்றை பாதுகாப்பதற்காக துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாக ஜோதிபாசு கூறினர். இச்சம்பவம் தொடர்பாக விசாரணைக் கமிஷன் அமைப்பது பற்றிய கோரிக்கையை அவர் அடியோடு நிராகரித்தார். அது போலீசாரின் உணர்வுகளை பாதிக்கும் என்றார் ஜோதிபாசு!!

காங்கிரஸ் இளைஞர் அணியை தாக்கிய ஜோதிபாசுவின் அதே போலீசார் தான் ஜோதிபாசு அரசாங்கம் பஸ் கட்டணம், ஆஸ்பத்திரி கட்டணங்களை உயர்த்திய போது எழுந்த பரந்த மக்கள் எதிர்ப்பையும்; ஒடுக்குவதற்கு பயன்படுத்தப்பட்டது. அதே போல் கடந்த நவம்பர் 2ல் ஹரிகர்பாராவில் ஸ்டாலினிச நிர்வாகத்தின் பிற்போக்கு நடவடிக்கைகளை எதிர்த்து திரண்டெழுந்த மூவாயிரம் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது நடத்தப்பட்ட போலீஸ் துப்பாக்கி சூட்டில் எட்டு பேர் கொல்லப்பட்டனர். ஆக ஜூலை 21ல் படுகொலை நடவடிக்கைகள் உண்மையிலேயே ஸ்டாலினிச அரசாங்கத்திற்கு எகிராக வளர்ச்சியடையும் பரந்த தொழிலாளர்களின், மாணவர்களின், வேலையற்றோரின், மத்தியதர வர்க்கப்பிரிவினரின் இயக்கத்துக்கு ஒரு எச்சரிக்கையாகவே செய்யப்பட்டது, புரட்சிகர தலைமை வெற்றிடம் உள்ள நிலையில் ஸ்டாலினிச அரசாங்கத்துக்கு எதிரான தொழிலாள வர்க்க எதிர்ப்பை முதலாளித்துவ கட்சிகளான காங்கிரஸ், பாரதிய ஜனதாக் கட்சி மற்றும் மாவோயிச அமைப்புகள் சுரண்ட முயற்சிக்கின்றன; ஜோதிபாசு அரசாங்கத்தின் உண்மையான இலக்கு மேற்கு வங்க தொழிலாள வர்க்கமே,

### தொழிலாளர் விரோதம்

மேற்கு வங்கத்திற்கு பன்னாட்டு கம்பனிகளின் முதலீட்டை வரவழைப்பதற்கு ஜோதிபாசுவின் ஸ்டாலினிசஅரசாங்கம் பெரும் முயற்சிகள் எடுத்து வருகிறது. ஜோதிபாசுவும் அவரது மகனும் முதலாளியுமான சத்தன்பாசு கடந்த வருடங்களில் பல ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளுக்கு விஜயம் செய்து காங்கிரஸ் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு வக்காலத்து வாங்கி பெரும் முதலாளிகள் பங்கு கொண்ட கூட்டங்களில் உரையாற்றினர்கள். இந்த வருடம் ஜூன் மாதம் ஜோதிபாசு மேற்கு வங்க தொழிலாளர்கள் தமது தொழில் கலாச்சாரத்தைமாற்றவேண்டும் என்று



ஏகாதிபத்திய கொள்ளைக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் உலக வங்கி தலைவருடன், முதலாளித்துவ போலீஸ் படைக்கு வக்காளத்து வாங்கும் எதிர்புரட்சியாளன் ஸ்டாலினிச ஜோதிபாசு.

பொதுக் கூட்டத்திலே பேசும் போது கூறினர். தமக்கு தொழில் அதிபர்களிடமிருந்தும் இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் (முதலாளிகளிடமிருந்தும்) மேற்கு வங்க தொழிலாளர்களின் தொழில் கலாச்சாரம் சம்பந்தமாக முறைப்பாடுகள் வருவதாகவும் இதனல் அவர் மனம் நொந்து போய் இருப்பதாகவும் கூறினர். அதாவது மேற்கு வங்க தொழிலாளர்கள் முதலாளிகளின் இலாபத்தை பெருக்க கடுமையாக உழைக்க வேண்டும் என்று ஜோதிபாசு கூறுகிறார். தொழிற்துறை பாலைவனமாக மேற்கு வங்கம் மாறுவதை தான் பார்க்க விரும்பவில்லை என்றும் அதனல் மேற்குவங்க தொழிற்துறை பொருளாதாரம் புணருத்தாரணம் அடைய ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டும் என்றும் பாசு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த வேண்டுகோள் இதர மாநில காங்கிரஸ், ஜனதாதளம், அ.தி.மு.க.. பாரதிய ஜனதாக் கட்சிகளைச் சேர்ந்த முதல்வர்கள் தத்தமது மாநில வளர்ச்சிக்காக பிராந்தியவாத கண்ணேட்டத்தின் அடிப்படையில் வேண்டுகோள் விடுவதிலிருந்து மாறுபட்டதல்ல. ஒரு வேறுபாடு என்னவென்றல் ஜோதிபாசு ''மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி'' யிலிருந்தி சமயத்திற்கு சமயம் சோசலிசம், கம்யூனிசம் போன்ற வார்த்தைகளை கூறிய வண்ணம் இவற்றை செய்கிறார்,

### ஸ்டாலினிசத்தின் பரிணமம்

அக்டோபர் புரட்சியின், லெனினின் சர்வதேசிய சோசலிச புரட்சி முன்னேக்குகளை கைவிட்டு தமது சலுகைகளை பாதுகாப்பதற்காக சோவியத் அரசுடைமையில் ஒட்டுண்ணியாக இருந்து வளர்ச்சி கண்டதுதான் ஸ்டாலின் தலைமையிலான அதிகாரத்துவம், அது ''தனி ஒரு நாட்டில் சோசலிசம்'' என்ற மார்க்சிய விரோத கொள்கையை பின்பற்றி அதன் அதிகாரத்துவ சலுகைகளை பாதுகாத்தது, இதனை எதிர்த்து 1923ல் டிராட்ஸ்கி தலைமையில் உருவாக்கப்பட்ட இடதுசாரி எதிர்ப்பியக்கத்தை நசுக்கியது, அக்டோபர் புரட்சிக்கு லெனினுடன் தலைமை வழங்கிய போல்ஷேவிக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையோரை படுகொலை செய்தது. டிராட்ஸ்கியையும், அவரது லட்சக்கணக்கான ஆதரவாளர்களையும், சுதந்திரமாக சிந்திக்கக் கூடிய அறிவு ஜீவிகளையும், கலைஞர்களையும் கொன்று குவித்தது. இதன் மூலம் தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் சோவியத் ஜனநாயகத்தை நசுக்கி அரசியல் அதிகாரத்தையும் தொழிலாள வர்க்கத்திடமிருந்து பிடுங்கிக் கொண்டது. 1933ல் ஐரோப்பாவில் சக்திவாய்ந்த தொழிலாள வர்க்கமாக திகழ்ந்த ஜெர்மனிய தொழிலாள வர்க்கம் ஹிட்லரினால் கோரமாக ஒடுக்கப்படுவதற்கு ஸ்டாலினின் கொள்கைகள் காரணமாக அமைந்தன, இதற்கு வக்காளத்து வாங்கிய மூன்றும் அகிலத்தின் இதர பகுதிகளும் சோவியத் ஸ்டாலினிசத்துடன் கூடவே முழுமையாக எதிர்புரட்சிகர முகாமுக்கு சென்று விட்டதாக டிராட்ஸ்கி கூறினார், ஸ்டாலினிசம், தொழிலாள வர்க்க மத்தியில் ஏகாதிபத்தியத்தின் எதிர் புரட்சிகர ஏஜண்டாக செயல்படுவதாக டிராட்ஸ்கி கூறினார், அதனை அரசியல் ரீதியாக அழிக்கவும், தொழிலாள வர்க்கத்திற்கு புதிய புரட்சிகர முன்னோக்கை வழங்கவும் 1938ல் நான்காம் அகிலத்தை டிராட்ஸ்கி ஸ்தாபித்தார்.

### ஊர்ஜிதம்

ஸ்டாலினிசம் சம்பந்தமான டிராட்ஸ்கியின் சக்தி வாய்ந்த மார்க்சிய ஆய்வு இன்று பல பத்தாண்டுகளுக்கு பின்னர் தீர்க்கமாக ஊர்ஜிதமாகியுள்ளது, உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டம் காட்டிக் கொடுக்கப்பட்ட நிலையில் நீண்டகால முதலாளித்துவ சுற்று வளைப்பின் கீழ் சோவியத் யூனியன் உலக முதலாளித்துவத்தின் அழுத்தங்களுக்கு பலியாக நேரிடும், அப்போது ஸ்டாலினிச அதிகாரத்துவம் தனது சலுகைகளை தொடர்ந்து பாதுகாப்பதற்காக அதனைஒரு முதலாளித்துவ வர்க்கமாக மாற்றிக் கொள்ளும் என்று டிராட்ஸ்கி முன் ஆய்ந்து கூறினார். இந்த வளர்ச்சிப் போக்கிலேயே இன்று சோவியத் ஸ்டாலினிசம் சோவியத் யூனியனை அழித்ததுடன், உடைந்த துண்டுகளில் முதலாளித்துவ மீட்சிக்காக தீவிரமாக வேலை செய்கிறது. ஏகாதிபத்தியங்களின் தரகு முதலாளித்துவ பிரிவுகளாக பழைய ஸ்டாலினிஸ்டுகள் இன்று செயற்பட்டு வருகின்றனர், இதுவே கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சீனாவிலும், வியட்நாமிலும் நடந்து வருகிறது. இந்திய ஸ்டாலினிஸ்டுகளும் அவர்களது ''சர்வதேச தோழர்களின்'' பாதையிலிருந்து விதிவிலக்காக இருக்க மாட்டார்கள் என்பதைத்தான் மேற்கு வங்க ஸ்டாலினிஸ்டுகளின் அரசாங்கம் எடுத்துக் காட்டுகிறது.

இந்திய புரட்சியின் மரண எதிரிகளாக இந்திய ஸ்டாலினிஸ்டுகள் செயற்பட்டு வந்தார்கள். 1947ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் இந்திய முதலாளித்துவமும் கூட்டாக சதி செய்து தொழிலாள வர்க்கத்தை மதவாத அடிப்படையில் பிளவுபடுத்துவதற்கு அன்று ஒன்றுபட்டிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துழைப்பு வழங்கியது. முஸ்லிம்கள் ஒரு தனி தேசிய இனம் அவர்கள் தனியாக ஒரு அரசை ''பாகிஸ்தானை'' உருவாக்க அவர்களுக்கு தேசிய சுயநிர்ணய உரிமை இருப்பதாக ''கம்யூனிஸ்ட் கட்சி'' கூறியது,

பாகிஸ்தானின் உடைவும் (1971ல்) அவ்விரு நாடுகளிலும் தொழிலாளர்களும் விவசாயிகளும் சிறுபான்மை மக்களும் மோசமாக ஒடுக்கப்பட்டு வருவதும் ஸ்டாலினிஸ்டுகளின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையின் எதிர்புரட்சித் தன்மையை மேலும் வெளிச்சமாக காட்டுகிறது. 1947இன் மதவாத பிரிவினையும் போதாதென்று மேலும் மொழி, ஜாதி அடிப்படையில் துணை கண்ட தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்தி தொழிலாள வர்க்க ஐக்கியத்தையும் எதிர்ப்பையும் பலவீனப்படுத்துவதற்கு சி.பி.ஐ., சி.பி.எம், சி.பி.ஐ, (எம்.எல்) ஆகிய அனைத்து ஸ்டாலினிச அமைப்புகளும் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சிக்கு மாற்று அணி இல்லை, காங்கிரஸ் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கை முற்போக்கானது என்று கூறி சிபிஐ. சிபிஎம். இரண்டு ஸ்டாலினிச கட்சிகளும் முத

(19 [redacted]ம் பக்கம் பார்க்க)

## சர்வாதிகார தேசிய ..

(17ம் பக்கத் தொடர்ச்சி)

ழிலாளர் ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்தினை அமுல் செய்கின்றதும். தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்கின்றதும், விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்றதுமான ஒரு தொழிலாள — விவசாயிகள் அரசாங்கத்துக்கு அதாவது — தமிழீழம் — இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்துக்குப் போராடுவதே தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் முன்னுள்ள ஒரே வேலைத் திட்டமாகும்.

**சர்வதேச சோசலிசததிற்குப் போராடும் நான்காம் அகிலத்தைக் கட்டு!**

படிப்பகம்

# பீ.எல்.ஓ-சியோனிச..

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்தது. 1988 டிசம்பரில் பாலஸ்தீன இன்ரிபாடா வெடித்ததில் இருந்து பீஎல்ஓ வின் வர்க்கப் பண்பு அம்பலமாகியது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலுக்கு எதிரான கிளர்ச்சிகளிலும், வேலைநிறுத்தங்களிலும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் இறங்கினர், இந்நிலையில் பீஎல்ஓ,சியோனிச இஸ்ரேல் அரசினை நிர்மூலமாக்கி மதச்சார்பற்ற பாலஸ்தீனத்தை நிறுவும் தனது முன்னைய வேலைத்திட்டத்தைக் கைவிட்டு, சியோனிச இஸ்ரேலின் ஆளுமையையும், சட்டரீதியான தன்மையையும் அங்கீகரித்தது. மதச்சார்பற்ற பாலஸ்தீனத்தை நிறுவும் வேலைத்திட்டம், 1967ல் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களின் ஒரு பகுதியில் ஒரு ஏகாதிபத்தியக் கட்டுப்பட்டுக்குட்பட்ட மாகாணத்தினை நிறுவும் திட்டத்தினால் பதிலீடு செய்யப்பட்டது.

அரபு முதலாளித்துவத்தின் பெரிதும் தீவிரமான கன்னையினைப் பிரதிநிதித்துவம் செய்த பீஎல்ஓவின் இத்திருப்பம் முதலாளித்துவ தேசிய வாதத்தின் வங்குரோத்தினை முழுமனே வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. பல தசாப்தங்களாக பல்லாயிரக்கணக்கான தியாகம் நிறைந்த பாலஸ்தீன இளைஞர்களைப் போராட்டத்துக்கென அணிதிரட்டிய பீஎல்ஓ தலைமை இன்று உலகின் ஏனைய பாகங்களிலும் உள்ள தேசிய முதலாளி வர்க்கங்களைப் போன்று தனது சொந்தச் சுரண்டலுக்கான வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. இதனாலேயே பீஎல்ஓ முன்நோக்கு இஸ்ரேலின் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது. சிரியா, ஜோர்டான் ஈராக் முதலான நாடுகளின் ஆட்சியாளர்கள் இந்த ஏகாதிபத்திய — சியோனிச சதிக்கு மனமுவந்து ஆதரவு வழங்கியுள்ளனர்.

பீஎல்ஓ வினை பாலஸ்தீன மக்களின் 'ஏக பிரதிநிதியாக' அங்கீரித்து அதன் தேசிய வாதத்திற்கு அடிபணிந்த பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் முன்நோக்கிற்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் நடாத்திய வெற்றிகரமான போராட்டத்தினை பாலஸ்தீன தேசிய வாதத் தலைமையின் இக்கொலைகார உடன்படிக்கை ருசுப்படுத்தியுள்ளது. இன ஒதுக்கல் ஆட்சியாளர்களுடன் 'அதிகாரப் பகிர்வு'க்குச் செல்லும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் நெல்சன் மண்டேலா தலைமையும் தொண்டமானுடன் லண்டன்—பாரிஸ் பேச்சவார்த்தைகள் நடாத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரபாகரன் தலைமையினதும் தேசிய வாத வங்குரோத்தின் உச்சக்கட்டமான ஆயுதப் போராட்டத்தினதும் தேசிய விடுதலை இயக்கததினதும் மாதிரியாகக் கொள்ளப்பட்ட பீஎல்ஓ வின் இந்தப் பிற்போக்குத் திருப்பம் அமைந்துள்ளது.

பீஎல்ஓ வின் காட்டிக் கொடுப்பும் அரபுத் தொழிலாளர்களுக்கு எதிரான ஒடுக்கு முறையும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் மட்டுமன்றி முழு மத்திய கிழக்கிலும் புதிய புரட்சிகர வெடிப்புக்களை நிச்சயம் சிருஷ்டிக்கும். மத்திய கிழக்கில அராபிய, யூத் தொழிலாளர்கள் பிற்போக்கு இனவாத சியோனிச அரசுக்கு முடிவு கட்டி, இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்தியப் பிடியைச் சிதறடிக்கும் போராட்டத்தில் ஐக்கியப் படுத்தப்பட வேண்டும். முதலாளித்துவ, ஏகாதிபத்திய ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்ட செயற்கைத் தேசிய அரச எல்லைகளைக் களைந்து, மத்திய கிழக்கு சோசலிச ஐக்கிய அரசுகளை நிர்மாணிக்க வேண்டும். ட்ரொட்ஸ்கிச நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே இப்போராட்டத்தினை முன்னெடுக்கின்றது.

# ஐரோப்பாவில் இயங்கும்..

(16ம் பக்கத் தொடர்ச்சி)

தின் வரலாற்று அபிவிருத்திக்கு நலவற்ற முறையில் சேவை செய்கின்றன எனப் பப்லோவாதம் வாதிட்டு வந்தது. நான்காம் அகிலத்தினைக் கலைத்து விடுவது இதன் தர்க்க ரீதியான முடிவாக விளங்கியது. இந்த மார்க்சிசத் திரிப்பின் பேரழிவு மிக்க விளைவுகள் 1964ல் திருமதி பண்டாரநாயக்கவின் கூட்டரசாங்கத்தில் லங்காசமசமாஜ கட்சி நுழைந்ததன் மூலம் ஆற்றிய கொலைகாரப் பாத்திரத்தின் மூலம் வெளிப்பாடாகியது. பு.க.க. வின் முழு வரலாறும் 1953ல் ஸ்தாபிக்கப்பட்ட அனைத்துலகக் குழுவினால் பப்லோவாதத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போராட்டத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது.

நவீன உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியும் உற்பத்தியின் உலகளாவிய இணைப்பும் முதலாளித்துவம் வரலாற்று ரீதியில் வேரூன்றியுள்ள தேசிய அரசு முறையையே உடைத்தெறிய அச்சுறுத்திக் கொண்டுள்ளது இந்த அபிவிருத்திகளிடையே தமிழீழத்தின் ஸ்தாபிதம் தமிழ் வெகுஜனங்களின் அடிப்படை ஜனநாயக அபிலாசைகளைத்தன்னும் பூர்த்தி செய்யும் என நினைப்பது ஒரு பிற்போக்குக் கற்பனையாகும். தமிழீழ விடுதலைப் புலிகளதும் மற்றும் சகல தேசிய விடுதலை அமைப்புக்கள் எனப்படுபவற்றின் இலக்குக்களுக்கும் ஒடுக்கப்படும் வெகுஜனங்களது அபிலாசைகளுக்கும் இடையே பொதுத் தனமை கிடையாது. இந்தக் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் கையாலாகாத் தனமான முறையில் ஏகாதிபத்தியத்துடன் உடன்பாட்டுக்குச் செல்வது, தமது அபிலாசைகளைப் பேணும் பொருட்டு புதிய களங்களை நிர்மாணிப்பதற்கே.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கின் முக்கிய அங்கம், சிங்கள இனவாத ஆட்சியைத் தூக்கிவீசி, இலங்கை—தமிழீழம் சோவியத் சோசலிச குடியரசினை நிறுவும் பொருட்டு தீவின் தமிழ்—சிங்களத் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் போராட்டமே, இந்த வேலைத்திட்டத்துக்குத் தமிழ், சிங்கள தொழிலாளர்களை வெற்றி கொள்வதில் தாம் முன்னேற்றம் கண்டுள்ளதாக இந்த ஆண்டு நிறைவு விழாவில் கூறுவதற்குப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்குச் சகல உரிமையும் உண்டு.

அனைத்துலகக் குழுவின் எதிரில் முன்வைக்கப்படும் தீர்க்கமான அரசியல் நடவடிக்கைகளுக்குத் தயார் செய்ய நாம் உங்களுடன் இணைந்து நிற்கின்றோம். எதிர்காலம் ஸ்டாலினிஸ்டுகளுக்கோ அல்லது சமூக ஜனநாயகவாதிகளுக்கோ அல்லது குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளுக்கோ உரியது அல்ல. சோசலிச புரட்சியின் உலகக் கட்சியாக அனைத்துலகக் குழுவினைக் கட்டியெழுப்புவதே மனித இனத்தின் எதிர்காலத்துக்கான ஒரே வழியாகும்.

தங்கள் தோழமையுள்ள

கே. ஆர். நேசன்

(செயலாளர், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் புலம் பெயர்ந்தோர் அமைப்பு)

# மேற்குவங்க போலிஸ்.

(18 பக்கத்திலிருந்து)

லாளித்துவ காங்கிரஸ் ஆட்சியை தொடர்ந்து தக்க வைத்து வந்தன. 1987இலிருந்து வி,பி. சிங் தலைமையில் ஜனதா தளம் முற்போக்கானது என்று கூறி தொடர்ந்து முதலாளித்துவ ஆட்சி அமைப்பை காத்து வந்தது. 1977ல் மொரார்ஜிதேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சிக்கு ஆதரவு வழங்கியது. ஜனதா அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருந்த ஜனசங்கம் பின்னர் பாரதிய ஜனதாக் கட்சியாக உருவெடுத்தது. ஸ்டாலினிஸ்டுகள் நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கும் பாசிச வகுப்பு வாத கட்சியென்று கூறும் அதே பாரதீய ஜனதாக் கட்சிவுடன் சேர்ந்து வி பி சிங் சிறுபான்மை ஆட்சியை 11மாதங்கள் தக்க வைத்தனர், மேலும் பிராந்தியவாத இனவாத கட்சிகளான தி மு.க. தெலுங்கு தேசம் ஆகியவற்றுக்கு முற்போக்கு முலாம்பூசி அவற்றின் வளர்ச்சிக்கு உதவியளித்து வருகின்றன. குறிப்பாக 1991லிருந்து மிக வெளிப்படையாகவே ஏகாதிபத்திய நிறுவனங்களான உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் கையாளாக இயங்கிவரும் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியை தக்க வைத்து வருவதில் ஸ்டாலினிஸ்டுகளே முக்கிய பங்கு வகிக்கின்றனர். 1991ல் காங்கிரஸ் கட்சி சிறுபான்மை ஆட்சியை அமைத்த போது அதை தக்க வைப்பதை நியாயப்படுத்தி ஜோதிபாசு கூறியதாவது: ''விரைவில் மற்றொரு தேர்தலை மக்கள் விரும்பமாட்டார்கள். மக்கள் பாராளு மன்ற ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை இழந்து விடுவார்கள் நாட்டில் குழப்பம் ஏற்படும்.''

இந்த முதலாளித்துவ ஜனநாயகத்தை பாதுகாப்பதில் இதர முதலாளித்துவ கட்சிகளைப் போலவே ஜோதிபாசுவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார். அதனால்தான் ஜுலை 21 படுகொலை நடவடிக்கை சம்பந்தமாக விசாரணை நடத்தப்படுமாயின் அது போலீசாரின் உணர்வுகளை பாதிக்கும் என்றார்.

## போலீஸ்

ஜோதிபாசு அரசாங்கம் பயன்படுத்தும் போலீஸ்படை இதர மாநிலங்களில் அல்லது சர்வதேச ரீதியாக முதலாளித்துவ ஆட்சியாளர்கள் பயன்படுத்தும் போலீஸ் படையின் வர்க்க குணாம்சத்திலிருந்து வேறுபட்டதல்ல. போலீஸ் இராணுவம் இவை அனைத்துமே தொழிலாள வர்க்கத்தை ஒடுக்கி முதலாளித்துவ (தனியுடமையின்) சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினால் பயன்படுத்தும் அரசு இயந்திரங்களாகும்; அரசு இயந்திரம் சம்பந்தமாக மார்க்ஸ், ஏங்கெல்ஸின் நிலைப்பாட்டை வலியுறுத்தி மகத்தான அக்டோபர் புரட்சியின் தலைவர் லெனின் அரசும் புரட்சியும் என்ற நூலில் நூற்றுக்கணக்கான பக்கங்களில் எழுதியுள்ளார், மார்க்ஸ் ஏங்கெல்ஸ், லெனினின் கருத்துப்படி தொழிலாள வர்க்கத்தை ஒடுக்குவதற்காக ஏற்கனவே தயாராகியிருக்கும் அரசு இயந்திரத்தை தொழிலாள வர்க்கம் அப்படியே எடுத்தாள முடியாது. அது அனைத்தையும் தொழிலாள வர்க்கம் நொறுக்க வேண்டும், உடைக்க வேண்டும், தகர்த்திட வேண்டும் (அரசும் புரட்சியும்

-லெனின், பக்கம் 151.

ஆனால் கம்யூனிச முகமுடி, அணிந்துள்ள ஜோதிபாசுவையும்.சி,பி.எம்., சி பி.ஐ, ஸ்டாலினிசகட்சிகளையும் பொருத்தவரை தொழிலாள வர்க்கத்தினால் நொறுக்க, உடைக்க-தகர்க்கப்பட வேண்டிய அரசு இயந்திரத்தின் உணர்வுகளுக்கு பாதிப்பு ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும்

ஏகாதிபத்திய நாடு கடந்த கம்பனிகள் பூகோள ரீதியான உற்பத்தியில் கம்பியூட்டர், தொலை தொடர்பு, போக்குவரத்து சாதனங்களில் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான [illegible] உதவியுடன் ஈடுபட்டுள்ளனர், அவ்வாறான நாடு கடந்த கம்பனிகள் மிக மலிந்த கூலியை தேடி பூகோள ரீதியான வேட்டையில் ஈடுபட்டுள்ளனர், பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் தமது வர்க்க நலன்களை பாதுகாக்க பன்னாட்டு கம்பனிகளுடன் கூட்டிற்கு செல்கின்றன, அல்லது அவற்றினால் விழுங்கப்படுகின்றன. அதுபோலவே ஸ்டாலினிச அதிகாரத்துவங்களும் இன்று பண்பியல் ரீதியான மாற்றமடைந்து ஏகாதிபத்தியத்தின் தரகு முதலாளித்துவ பிரிவுகளாக மாறியுள்ளன. ஜோதிபாசுவின் பாதையும் அதுவே. மேற்கு வங்கத்தில் ஏகாதிபத்தியத்தின் தரகு முதலாளித்துவ கையாளாக இருப்பது ஜோதிபாசுவா, மமதாபானர்ஜியா என்பதே அவர்களுக்கு இடையிலுள்ள மோதலின் சாரம்.

தொழிலாள வர்க்கம் இந்த இரண்டு ஏகாதிபத்திய கால் வருடிகளையும் நிராகரிக்க வேண்டும் பொது எதிரியான முதலாளித்துவத்துக்கு எதிராக சர்வதேச ரீதியான தொழிலாள வர்க்கத்துடன் சோசலிசத்துக்கான போராட்டத்தில் ஒன்று சேர வேண்டும். இந்த சோசலிச சர்வதேசிய வேலைத்திட்டத்திற்கு போராடும் உலக கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவையும் அதனுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தையும் கட்டுவதே, இன்று வர்க்க நனவுள்ள தொழிலாளர்கள், புரட்சிப் பாதையை நாடும் அறிவு ஜீவிகள் இளைஞர்கள். மத்தியதர வர்க்கப் பகுதியினர் முன்னுள்ள புரட்சிகர கடமையாகும்.

**தொழிலாள வர்க்க இயக்கத்திலிருந்து ஸ்டாலினிச துரோகத் தலைமைகளை வெளியேற்ற போராடு!**

வெளியீடு: சோசலிசத் தொழிலாளர் கழகம் தபால் பெ. எண், 968 பெரம்பூர் பாரக்ஸ்சென்னை-12, அச்சிட்டோர் : பரணி அச்சகம், சென்னை-12.
ஆசிரியர் : எஸ், சக்தி,

www.padippakam.com

படிப்பகம்

# ஜே. வீ. பி. பாசிஸ்டுகளால் கொலையுண்ட தோழர். கிரேசன் நினைவு தினக் கூட்டம்

1989 ஜூலை 23ம் திகதி (சிலாபம்) தொடுவாவையில் கொலை செய்யப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர் தோழர், கிரேசன் கியனகேயின் நான்காவது ஆண்டு நினைவு தினக் கூட்டம் தொடுவாவையில் உள்ள அவரது இல்லத்தின் முன்றிலில் நடைபெற்றது.

கொலையுண்ட தோழரின் சகோதரரும் பு.க.க. அங்கத்தவருமான தோழர், நிஹால் கியனகேயின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசிய பு.க.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ், பு.க.க. வின் அரசியல் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருவதற்காக கிரேசனின் தாயார், மனைவி, நிஹால் அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

மறைந்த தோழரின் இளம்பராய நினைவுகளை நினைவு கூர்கையில் தோழர். விஜே கூறியதாவது: ''தோழா. கிரேசனுடன் நீண்ட காலம் பழகும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. வாழ்க்கையைப் பெரிதும் நேசித்த ஒருவராக நான் அவரை இனம் கண்டேன். இளவயதில் விளையாட்டு உடற்பயிற்சியில் ஊக்கமுடன் ஈடுபட்டார். இளம் வயதில் தமது காதலியைத் திருமணம் செய்து கொண்டார். அதுமட்டுமன்றி எதிர்கால மனித இனத்தின் எதிர்பார்ப்புக்களால் உந்தப்பட்டு தமது அன்பு நிறைந்த குழந்தை ஒன்றையும் உலகுக்குஈன்று கொடுத்தார். இந்த மனித இன வாழ்க்கையை நேசித்து. எதிர்கால மனித இனத்தின் தலைவிதியையிட்டு எதிர்பார்ப்புக்கள் கொண்டிருந்த ஒருவர் முதலாளித்துவ அமைப்புக்கு குறையிரங்கிய ஜேவீபியின் பாசிச அலுகோசுகளால் கொலை செய்யப்பட்டார். இதன் மூலம் எம் அனைவருக்கும் இத்தகைய ஒரு மனோரம்மியமான வாழ்க்கை இல்லாமல் செய்யப்பட்டது.




கிரேசனின் நான்காவது ஆண்டு நினைவுக் கூட்டத்தில் பு.க.க. செயலாளர் விஜே டயஸ்

''தோழர். கிரேசன் இந்த எதிர்கால அபிலாசைகளைத் தமது தனிப்பட்ட கனவாகக் கொண்டிருக்கவில்லை. மனித இனத்தின் விடுதலையை இன்றைய ஏகாதிபத்திய உலகினுள் முதலாளித்துவ அமைப்பைத் துடைத்துக் கட்டும் உலக சோசலிசப் புரட்சி மூலமே சாதிக்க முடியும் என்பதை அவர் புரிந்து கொண்டிருந்தார். எனவே தான் அவர் தொழிலாள வர்க்கத்தின் உலகப் புரட்சிக் கட்சியின் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகத்தில் சேர முடிவு செய்தார். 27 வயதில் எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட தோழர்' கிரேசன். சகல இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வழங்கிய முன்நோக்கு இதுவே. நாம் கிரேசனுக்குச் செய்யக் கூடிய அதி உயர்ந்த கௌரவம், அம்முன்நோக்கில் காலூன்றவும் அதை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களிடையே உறுதி செய்யவும் ஈவிரக்கமின்றிப் போராடுவதே.

''ஜேவீபி பாசிஸ்டுகள் தோழர். கிரேசனுக்கு துப்பாக்கி நீட்டிய 1989 பதுதளைக் காட்டிலும் இன்று இந்த அனைத்துலகப் புரட்சிகர முன்னோக்கின் அவசியம் வரலாற்று ரீதியில் தலை நீட்டியுள்ளது.

''இன்று முதலீடுகளும், உற்பத்திகளும், வர்த்தகமும் உலகளாவிய ரீதியிலேயே இடம் பெறுகின்றன. பல்வேறு பன்னாட்டு ஏகபோகங்கள் உலகச் சந்தையின் உள்ளே தமது ஆளுமையை நிலைநாட்டும் ஏகாதிபத்திய அரசியல் அமைப்பினைக் கொண்டுள்ளன. இவை உலக ரீதியில் நிதி மூலதனத்தின் பக்கபலத்துடன் இராணுவத் தலையீட்டுடன் கூடிய ஆக்கிரமிப்புத் திட்டங்களை தயாரித்து வருகின்றார்கள்.

''தேசிய சிறப்புரிமைவாதம் தேசிய வேலைத்திட்டங்களைத் தாண்டி அனைத்து நாடுகளிலும் உலக ஏகாதிபத்தியத்தின் யுத்த வெறியும் காலனித்துவ வேலைத்திட்டங்களும் ஆதிபத்தியம் செலுத்துகின்றன. ஜனாதிபதி பிரேமதாச கொலை செய்யப்பட்டதன் பின்னர் விஜேதுங்க ஆட்சியை இந்த உலக சக்திகள் தம் பிடிக்குள் போட்டுக் கொண்டுள்ளன. பொருளாதார வேலைத்திட்டத்தில் செய்யும் மிலேச்ச மாற்றங்கள் மூலமும், நிர்வாக முறையிலும் உள்நாட்டு யுத்த திட்டங்களிலும் செய்யும அப்பட்டமான ஒடுக்குமுறை இலட்சணங்கள் மூலமும் இது தெளிவாகின்றது. 'கறுப்பு பூனை' கொலைக் கும்பலின் நெறியாளன் உடும்பொல ஜனாதிபதியின் விசேட சிபார்சின் பேரில் வரவழைக்கப்பட்டுள்ளமை இத்திட்டங்களுடன் தொடர்பற்ற ஒரு தற்செயலான நிகழ்வு ஆக முடியுமா?' என விஜே டயஸ் கேட்டார்.

''இந்நிலையில் முதலாளித்துவ, முதலாளித்துவச் சார்பு அமைப்புக்களின் சகல சந்தர்ப்பவாதத் தலைவர்களும் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களின் எடுபிடிகள் ஆகியுள்ளனர். சமசமாஜ, ஸ்டாலினிசத் தலைவர்கள் ஏகாதிபத்தியச் சார்பு சி.ல.சு.க.வுடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்துக்கு தோள் கொடுத்துள்ள அதே வேளையில் நவசமசமாஜ துரோகிகள் ஜேவீபி பாசிச கொலைகாரர்களின் பணியினை அரங்கேற்ற இணைந்து செயற்படுகின்றார்கள். விடுதலைப் புலிகள் இயக்கமும் இத்தலைவர்களும் இந்நாட்டில் ஜனநாயகத்தை காக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஏகாதிபத்திய கள்வர் குகையான ஐக்கிய நாடுகள் சபைக்கும் அழைப்பு விடுக்கின்றனர். இது உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒன்றிணைந்து கிளர்ந்து எழக் கூடிய உலகத் தொழிலாள வர்க்கத்துக்கும் அதன் சுயாதீனமான வேலைத்திட்டத்துக்கும் எதிராக கொலைகாரர்களுக்கும், ஆக்கிரமிப்பாளர்கட்கும் விடுக்கப்படும் அழைப்பாகும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இத்துரோகத்தை எதிர்த்து, உலக தொழிலாளி வர்க்கத்தை அனைத்துலக புரட்சிகர அடிப்படையில் ஐக்கியப் படுத்தவும் அணிதிரட்டவும் போராடுவதாக விஜே டயஸ் மேலும் குறிப்பிட்டார். அந்த அடிப்படையில் போராடுவதன் மூலமே தோழர் கிரேசனின் உயிர்த் தியாகத்தினை கௌரவிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.




விலை 5-




விலை 2-




விலை 2.50-

பெற்றுக் கொள்ளவேண்டிய முகவரி. **Tholilalar Pathai. Postfach 1609. 74321 Bietigheim-Bissingen**